# அடி

அடிபட்டு ரோட்டுல கிடக்கறவன் பேரு எவனுக்கும் தெரிஞ்சுருக்க வாய்ப்பில்லெ. ஏன்னா, பட்டணத்துலதான் யாரு பேரத் தெரிஞ்சுக் கவும் எவனுக்கும் நேரமில்லேயே. நேரமில்லேன்னு சொல்றதவிடவும் அக்கறை இல்லேன்னு சொல்றது தான் சரி. இதேது கிராமத்துலன்னா கோட்டூட்டு மல்லப்பிள்ளையா, அது நம்ம பயதானே, வயக்காட்டு சாமி வூடா, அது நடுத் தெருவுலல்ல இருக்குன்னு ஊருல ருக்க மொத்தப் பயக பேரயும் ஞாபகத்துல வச்சுருப் பாங்க. இங்கதான் பக்கத்து வூட்டுக்காரன் பேருகூட எவனுக்கும் தெரியாதே. அப்புடி இருக்கறப்ப பாதைல அடிபட்டுக் கெடக்குறவன் பேரு எப்புடித் தெரியும்? ஆனா, பள்ளிக்கொடத்துலப் படிக்கறப்ப மட்டும் பாருங்க, பரிச்சையில மார்க் வாங்கணுங்கறதுக்காக எல்லாப் பயலுக பேரயும் மனப்பாடம் பண்ணிவச்சு ருப்பானுங்க. கரண்டக் கண்டுபுடிச்சவன், ரயிலக் கண்டு புடிச்சவன், சண்டைபோட்டவன், சண்டைல செயிச்ச வன்னு எவன் பேரயும் வுட்டுவைக்கறதுல்ல. அந்தப் பேரு வாயில நொழையாத பேராக்கூட இருக்கும். அடிபட்டுக் கெடக்குறவனும் சாதாரணமான ஆளு இல்ல. ரோட்ல சாக்பீஸால கலர்கலராப் படம்போட்டுக் காசு பாக்குறவன். அவன் போடுறது பெரும்பாலும் ஏசு, ராமர், கிருஷ்ணர்னு சாமிப் படமாத்தான் இருக்கும்.

அதயும் அவன் போட்டுகிட்டிருக்கறப்ப போற வர்ற வன்ல ஒருத்தன், ''ஏம்பா ஆண்டவனையே ரோட்ல போட்டுட்டியே, இது அடுக்குமா?''ன்னு கேட்டிருக் கான். அதுக்கு இவன், ''அட போய்யா, வேலயப் பாத்துக் கிட்டு. அவன் என்னைய ரோட்ல போட்டான், பதிலுக்கு அவன நான் ரோட்ல போட்டேன். இதுல என்ன தப்புருக்கு?''ன்னு கேட்டுருக்கான். கேட்டவன் வாயப் பொத்திகிட்டுப் போயிட்டான்.

இவன் ரோட்ல கெடக்கறதுக்கு வேற எவனும் காரணமில்ல, இவனேதான். செட்டிக்குளத்துல வெட்டிக் குடும்பத்துல பொறந்த இவனுக்குப் பழனி முருகன்னு பேரு வச்சாங்க. அதுக்குக் காரணம் இவன் பொறந்த நேரம் காலைல ஏழு பத்து. அப்பத்தான் பழனிமுருகன் பஸ் துறையூர்லருந்து பாடாலூருக்குப் போவும். கிராமத்துலதான் பேரு வக்கறதுக்கு ஏதாவது காரணம் வேணுமே... அரையணாவ முழுங்குனவனுக்கு அரைப்பணத்தான்னும், வயக்காட்டுல பொறந்த பயலுக்கு வயக்காட்டுச் சாமின்னும், சண்டைல ஜெயிக் கறவனுக்குச் சமுத்தன்னும் பேரு வைப்பாங்களே. முருகன்ங்கறது சாமிப் பேராச்சேன்னு பேரு வச்சவன் கூட முழுப் பேரச் சொல்லிக் கூப்புடாம பாதிப் பேர முழுங்கிட்டுப் பழனின்னுதான் அவனெ எல்லாரும் கூப்புடுவாங்க. ஆனா, பங்குனி உத்தரத்துக்குக் காவடி யெடுக்கும்போது மட்டும் ''பழனிமுருகனுக்கு அரோ கரா''ன்னு கத்திகிட்டுக் கூட்டங்கூட்டமா மலையேறு வானுங்க. பழனிப் பய மூணு வயசாருக்கும்போதே கரிக் கட்டய எடுத்து பொங்கலுக்குச் சுண்ணாம்பு அடிச்ச சொவத்துல கோடுகோடாக் கிழிச்சுகிட்டு இருந்துருக் கான். இதப் பாத்த அவன் ஆத்தாக்காரி கோடு கிழிக்காதடா, சொவத்த அசிங்கம் பண்ணாதடான்னு சொல்லி மாளாம, ஒருநா ஊதாங்குழாயப் பழுக்கக் காச்சி அவன் மணிக்கட்டுல ஒரு இழுப்பு இழுத்துவுட்டுட்டா.

அந்தப் புண்ணு ஆறாமக் கெடக்க, அதுக்கப்பறம் அத ஆத்த அவ கள்ளிப்பாலுக்கு அலைஞ்ச கத வேற. அந்தத் தழும்பு இன்னமும் அவன் சோத்துக்கை மணிக்கட்டுல கோடாட்டம் இருக்கும். மொத அடி இதான்.

எல்லாப் புள்ளைங்களையும் அஞ்சு வயசுலதான் கொண்டுபோயி பள்ளிக்கொடத்துல சேக்கறது வழக்கம். புள்ளைங்க சோத்துக்கையால பொடனி வழியா பீச்சாங்காதத் தொட்டாதான் அஞ்சு வயசு முடிஞ்சிடுச்சுன்னு வாத்தியாரு ஒத்துக்குவாரு. பழனிப் பயல நாலு வயசுலயே பள்ளிக்கொடத்துல கொண்டுபோயி சேத்தாங்க. இவனும் தலைய நெளிச்சுக் கைய நீட்டிக் காதத் தொட்டுட்டான். சொவத்துல கிறுக்குனாத்தானே சூடு. சிலேட்டுலக் கிறுக்குனா எப்புடிச் சூடு போடமுடியும்? அழிச்சுப்புடலாமேன்னு பழனிப் பய பள்ளிக்கொடத்துல ஒக்காந்துகிட்டு, மத்த புள்ளைங்கள்ளாம் பாடம் எழுதிகிட்டிருக்க, இவன் மட்டும் படம் போட்டுகிட்டுருந்துருக்கான். அதிகமாப் போட்ட படம் காக்காயும் வாத்தும்தான். இவனப் பாத்து மத்தப் புள்ளைங்களும் படம் போட, இதப் பாத்த வாத்தியாரு அடிச்ச அடியில பக்கத்துலருக்கவன் கால்சட்டையோட கழிஞ்சுட்டான்னா பாத்துக்கங்க. செத்த நேரம் கழிச்சு வந்த நாத்தத்த வச்சுத்தான் வாத்தியாருக்கே தெரிஞ்சுருக்கு. அப்பறம் அவனப் போயிக் கழுவிகிட்டு வாடான்னு தொரத்தியிருக்காரு. கொஞ்ச நாளு கழிச்சு கவர்மெண்ட்லயே கைத்தொழில் ஒண்ணக் கத்துக்கோ, கவல உனக்கில்ல ஒத்துக்கோங்கற கோஷத்தோட, தையல் வேலை, மர வேலை, பாய் பின்னுறது, கட்டில் நாடா நெய்யறதுன்னு அததுக்குத் தனியா வாத்தியாரக் கொண்டாந்து போட்டாங்க. இப்புடி வந்ததுல ஓவிய வாத்தியாரும் ஒருத்தர். குத்தம் செஞ்சுட்டுத் தண்டனைக் கைதியாவும் ஜென்மக் கைதியாவும் உள்ள போனவங்களுக்கு ஜெயில்ல சொல்லிக்குடுத்தத,

இப்ப பள்ளிக்கொடத்துக்கும் கொண்டாந்துட்டா னுங்களான்னு சில பேரும், படிப்பச் சொல்லிக்குடுங் கடான்னு புள்ளைகளப் பள்ளிக்கொடத்துக்கு அனுப் புனா, பலபட்டற செய்யிற வேலையச் சொல்லிக் குடுக்குறானுங்க, இது உருப்புடுமான்னு சில பேரும், பொழைக்கற குடியானவன் பாக்குற தொழிலா இது, இதுக்குப் பேசாம பத்து எருமைங்கள மேய்க்க வுட லாமேன்னு சில பேரும் புள்ளைங்களப் பள்ளிக் கொடத்த வுட்டு நிறுத்திப்புட்டாங்க. வசதி உள்ளவன் புள்ள எதும் பள்ளிக்கொடத்துக்கு வரல. வாய்க்குச் செத்ததுங்க என்ன பண்ணும்? மத்தியான ஒருவேளை யாவது புள்ளைங்க வயிறாறக் கஞ்சியக் குடிக் கட்டும்ன்னு அனுப்புச்சுதுங்க. அதுல ஒருத்தனாப் போனான் பழனி. பழனி ஓவிய வாத்தியார அண்டிக் கெடக்கவும் அவரும் பேனா, பென்சிலுன்னு தங்கிட்ட இருக்கறதயெல்லாம் எடுத்துக் குடுத்து மொறையா வரையக் கத்துக்குடுத்துருக்காரு. பாத்த உருவத்த அப்புடியே அச்சுஅசலா வரையக் கத்துகிட்டான் பழனி. அந்த வருசக் கடசீல மாவட்ட லெவல்ல கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டின்னு கலெக்டர் முன்னி லைல நடத்துனாங்க. அதுல பழனி மாவட்ட லெவல்ல ஓவியப் போட்டில மொதப் பரிசு வாங்குனான். பரிசு குடுத்த கலக்டர் வேற இவ்வளவு சின்ன வயசுல இந்தப் புள்ள மனசுல இப்புடியொரு கற்பனையான்னு பாராட்டிப் பேசுனதக் கேட்ட பழனிப் பய தாயி, தகப்பனுக்குப் பெருமை பிடிபடல. அப்புடி என்னதான் படத்தப் போட்டுருக்கான்னு பாத்த சனங்களுக்கு அதிர்ச்சிமேல அதிர்ச்சி. பொதுவாவே நாய்க்கும் மனுசனுக்கும் ஒரு ஒட்டுதல் இருக்கும். அண்டி வாழுற ஜீவன்தானே அது. மொத நாளு அது ரோட்ல படுத்திருக் கறப்ப அந்த வழியாப் போனமுன்னா, எழுந்து வந்து நம்ம காலு கிட்ட மோந்து பாக்கும். அடுத்த நாளு அந்த வழியா போனா நம்மளப் பாத்ததுமே லேசா வாலை

ஆட்டும். அதுக்கப்பறம் அது நம்ம நாயாயிடும். உங்கள எங்கப் பாத்தாலும் வாலாட்ட ஆரம்பிச்சுடும். வாலாட்டுதேன்னு பொறையோ, ரொட்டியோ வாங்கிப் போட்டுட்டா போதும், உங்களை விடவே விடாது.

அப்புடித்தான் கறிக் கட பாய்க்கும் நாய்க்கும் சிநேகிதம் ஏற்பட்டு, புதன், ஞாயிறானாப் போதும், அவரச் சுத்தி எப்பவும் நாலு நாய்ங்க நிக்கும். பாயோட கறிக் கடை, முழங்காலுமுட்டுக்கும் கருங்கல்லை அடுக்கிவச்சு, அதுக்கு மேல நடுப் புளியமரத்த வெட்டி வச்சு, அதச் சுத்தி நாலு மூங்கிய நட்டுச் சதுரமா ஒத்தக் கீத்துல பந்தல் போட்டுருக்கும். பந்தலோட மூங்கில்ல தான் இரும்புக் கொக்கிய மாட்டி ஆட்ட உரிச்சித் தொங்கவுட்டுருப்பாரு. கீழ பக்கத்துல இரும்பு வாளில தண்ணி எப்பவும் இருக்கும். அப்பப்ப வாளில இருக்கற தண்ணிய அள்ளிக் கறி மேல தெளிப்பாரு. ஏன்னா கறி காஞ்சா எடை குறைஞ்சுடுமேங்கறதாலதான். நாலு நாய்ங்களும் குண்டியக் கீழ வச்சு முன்னங்காலு ரெண் டயும் தரையில ஊனிக் குந்திகிட்டுக் கறிக் கட பாய் கையவே பாத்துக்கிட்டிருக்கும்ங்க. பாய் வேஸ்ட்ன்னு எத நெனைக்கிறாரோ அந்த எலும்புத் துண்டக் கீழ வீசு வாரு. அது எந்த நாய்ப் பக்கத்துல போயி விழுதோ, அது அத எடுத்துக் கடிக்கும்ங்க. அதுங்களுக்குள்ள எப்பவும் எலும்புங்களுக்கு அடிச்சுக்காதுங்க. பாயும் கணக்குப் பண்ணித்தான் அதுங்களுக்கு எலும்பப் போடுவாரு. இத பழனிப் பய எப்பப் பாத்தானோ தெரியல, அவன் போட்ட படத்துல கறிக் கட பாய் மாதிரி ஒருத்தன் புளியமரக் கட்டைல நாயப் போட்டு வெட்டுறது மாதிரி யும் கீழ நாலு மனுசங்க ஒரு எலும்புத் துண்டுக்கு அடிச் சுக்குற மாதிரியும்தான் இருந்துருக்குது. போட்டி நடந்த நாலு நாளுக்கு முன்னதான் தந்தி பேப்பர்ல தாய்லாந் தில நாய்க் கறிக்கு ஏகக் கிராக்கி, கிலோ இரு நூறு ரூபாய்ன்னு செய்தி வந்திருந்தது. இது அவன் மனசுல

ஆட்டுக் கறியப் பொறுக்க நாய்ங்க நிக்குதே, நாய்க் கறியப் போட்டா எலும்பப் பொறுக்க யார் நிப்பான்னு தோணியிருக்கு. படத்துக்குப் பரிசு வாங்குனவன், பாடத்துல கோட்டவுட்டுட்டான். பெயிலாப் போன துல திரும்பப் போயிச் சின்னப் பயகக்கூட படிக்கறதுக் குச் சங்கடப்பட்டுகிட்டு அப்புடியே வுட்டுட்டான்.

படிப்பு இல்லன்னா என்ன, ஊருலதான் ஆயிரத் தெட்டு வேலை கெடைக்குதே. எதெயாவது பண்ணிப் புள்ளயக் காப்பத்த மாட்டானான்னு அவனுக்குக் கல் யாணத்தப் பண்ணிவுட்டுட்டானுங்க. கல்யாணத்துக்கு முன்ன ஒரு மாசத்துக்கும், பின்ன ஒரு மாசத்துக்கும் பொண்ணு மாப்புள்ளைக்குச் சோத்துப் பஞ்சம் இருக் காது. சொந்தபந்தங்க எல்லாம் ஆக்கிப்போடுறேன், வரிசை செய்யிறேன்னு வடபாயசத்தோட போட்டுச் சுங்க. இன்னுஞ் சில வூடுகள்ல்ல ஆடு, கோழின்னு கூடப் போடுவாங்க. சீக்குக் கோழியாட்டம் கூனிக் குறுகிக் கெடந்த மாப்பிள்ளையெல்லாம்கூட நரம்பு புடைக்கத் தெருவுல நடந்து போவாங்க. அதத்தான் மாப்பிள்ளை முறுக்குன்னு சொல்றது. கல்யாணத்துக்கு முன்ன எங்கக் கடன் கேட்டாலும் நானாச்சு மாப் பிளன்னு பத்தாயிரம், இருபதாயிரம்ன்னு குடுத்துச் செலவுபண்ண வுட்டுடுவாங்க. இவனுங்களும் பொண்ணுபாத்த சோக்குலயே வாங்கிச் செலவு பண்ணிட்டுத் திருப்பிக் குடுக்க முடியாம முழி பிதுங்கி நிக்கறதப் பாக்கப் பாவமாக்கூட இருக்கும். கட்டி வந்த புதுசுல பழனிப் பொண்டாட்டியும்கூட ராத்திரி கட்டில்ல இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிப் புளகாங்கிதம் அடைஞ்சிருக்கா. பொதுவாவே பிரஸ் புடிக்கறவங்க கையும் வெரலும் பஞ்சாட்டம் இருக்கும். அவன் கையப் புடிச்சவ உங்களுக்கு ப்ரஸ்ஸே தேவை யில்ல மாமா, விரலாலயே பெயின்டத் தொட்டு நீங்க படம் போடலாம்ன்னு மொத ராத்திரில சொல்லி

யிருக்கா. ஒரு வருசத்துலயே நெலம தலைகீழாயிருச்சு. இந்தச் சனியனக் கொண்டாந்து எந்தலைல கட்டித் தொலைச்சுட்டானுங்களேன்னு அவளும், வெறும் முண்டயக் கட்டித் தொலைச்சுட்டனே, மொகத்துல முழிச்சுட்டுப் போனாலே எதுவும் தொலங்க மாட்டேங் குதுன்னு இவனும் பொலம்ப ஆரம்பிச்சுட்டாங்க. அதுக்கப்பறம் அவ பிச்சலுக்குப் பயந்துகிட்டே வூட்டுப் பக்கம் தலைகாட்டாம சாவடித் திண்ணைலேயே மொடங்கிக் கெடந்துருக்கான் பழனி.

அந்த வருசம் பஞ்சாயத்து போர்டுக்கு எலக்சன் வந்துச்சு. சின்னம் போடுறதுக்கு பழனிய கூட்டிகிட்டுப் போனாங்க. எந்தக் கட்சின்னு பாக்காம, எல்லாக் கட்சிக் கும் போயி சின்னம் போட்டுக் குடுத்துருக்கான் பழனி. ஜெயிச்சவன் ''மவன, காசு கேக்குதா உனக்கு, வெட்டி வாழைமரத்துலக் கட்டி கம்மாயில வுட்டுடுவேன். பேசாமப் போயிடுன்னு'' சொல்லியிருக்கான். தோத்த வன் ''என்ன மச்சான், காசு இருந்தாத் தர மாட்டனா, நானே தோத்த கவலைல இருக்கேன். நம்மல்லாம் யாரு, ஒண்ணுக்குள்ள ஒண்ணுதானே. நாளைக்கு நம்ம கட்சி ஆட்சிக்கு வந்தா கவனிக்காமலா வுட்டுடுவேன்?''னு சொல்லியிருக்கான். இவன் ஜெயிச்சிருந்தா ஜெயிச்ச வன் பேசுனதத்தான் இவனும் சொல்லியிருப்பான். அவன் தோத்துருந்தாலும் இவன் சொன்னதத்தான் அவனும் சொல்லியிருப்பான். இந்தப் பழனி, சின்னம் வரையிலன்னாலும் இன்னொரு பழனி சின்னம்வரை வான். எலக்சனும் வரும். ஒருத்தன் ஜெயிப்பான். இன்னொருத்தன் தோப்பான்.

ஆறு மாசத்துக்கப்பறம் அவ ஓடிப்போனாளா, இல்ல இவன் அவள விட்டுட்டு ஓடிவந்துட்டானா இல்ல, அடிச்சுத் தொரத்திவிட்டுட்டாளான்னு தெரியல. பழனிப் பய மெரீனா பீச் மணல்ல சுத்திகிட்டிருந்தான். பீச்சுக்கு வர்ற போற சனங்ககிட்ட ஒங்கள வரைஞ்சுத்

தர்றேன்னு சொல்லி, வெள்ளப் பேப்பர்ல கருப்புப் பென்சிலால கோடுகோடா வரைஞ்சு குடுத்து அவங்கக் குடுக்கற அஞ்சயோ, பத்தயோ வாங்கி வயித்தக் கழுவி கிட்டு திரிஞ்சான். பாத்த பத்தாவது நிமிசத்துல அச்சு அசலா போட்டடாவுல இருக்கற மாதிரி வரைஞ்சுப் புடுவான் பழனி. இதப் பாத்த வெள்ளக்காரி ஒருத்தி என்கூட வந்துடு, நான் விசா எடுத்து எங்க நாட்டுக்குக் கூட்டிகிட்டுப் போறன்னுகூட கேட்டிருக்கா. அதுக்கப் புறம் பீச்ச வுட்டுட்டு ரோட்டுக்குப் படம் போட வந்துட் டான் பழனி. மொதமொதலா ஆறு, குளம், அருவின்னு தான் படம் வரைஞ்சுகிட்டு இருந்துருக்கான். சில்லறக் காசுதான் விழுந்திருக்கு. ஒருநா எதேச்சையா சாமிப் படத்த போட்டுருக்கான். காசு கொஞ்சம் நெறைய விழுந்திருக்கு. கொஞ்சமா காசு வந்த நாள்ல டீயும் பொறையும் வாங்கித் திங்கும்போது பக்கத்துல வந்த நாய்க்கும் கொஞ்சம் குடுக்கப்போக, அது இவன்கூட ஒட்டிக்கிடுச்சு.

இப்பல்லாம் பணம், காசு அதிகமா விழவும் தண்ணியடிக்க ஆரம்பிச்சுட்டான் பழனி. இப்ப அந்த நாய்க்கே பிரியாணிதான் வாங்கிப்போடுறான். அதுக்கப் பறம் அவன் மனுசங்க யார் கிட்டயும் எதும் பேசறது இல்ல. எதுவா இருந்தாலும் அந்த நாய் கிட்டதான் பேசறது, அதுக்குப் புரியுதோ இல்லையோ.. அது அவனயே உத்துப் பாத்துக்கிட்டும் அப்பப்ப வால ஆட்டிகிட்டும் இருக்கும். இன்னைக்குத்தான் பிராந்திக் கடைல சரக்க வாங்கிகிட்டு வந்தப்ப நடு ரோட்டுல எதுத் தாப்புல வந்த ஆட்டோ அடிச்சு, அவன் படம் வரையிற எடத்துலயே படமாக் கெடக்குறான். அந்தப் படத்து மேல வழக்கமா காசு போடுற சனங்க போட்டுகிட்டுப் போகுது. ஆட்டோ அடிச்சு விழுந்தப்ப அவன் ரத்தத்தப் பாத்துட்டு அந்த நாய் அவன்கிட்ட ஓடியாந்தது. ஆட்டோக்காரன் ரத்தத்தப் பாக்க, அத்தனச் சனங்களும் நின்ன ஆட்டோவப் பாத்து ஓடுச்சுங்க... •